சுஜாதா தேசிகன்



# லட்டுக்கு ராயல்டி

ராயல்டியும் பிரச்னையும் எப்போதும் சேர்ந்தே வரும். நீங்கள் உபயோகிக்கும் செல்போன் செயல்படுவதற்கு முக்கியமான விஷயம் அதன் ப்ராசசர் (தமிழில் செயலி). அதன் ஆற்றல் கூடக்கூட 'ஸ்மார்ட் போன்' வெண்ணெய் மாதிரி வேலை செய்யும். விலையும் அதிகமாகும். அமெரிக்காவைச் சேர்ந்த 'குவால்காம்' நிறுவனம் இந்தச் செயலியை உற்பத்தி செய்கிறது. விற்பனை செய்யும் ஒவ்வொரு செல்போனுக்கும் எங்களுக்கு ராயல்டி வேண்டும் என்று ஒப்பந்தம் செய்து பல நூறு கோடி ரூபாய் சம்பாதித்து, பிரச்னை வந்து, கோர்ட்டில் பஞ்சாயத்து நடந்தது.

இன்று பல கண்டுபிடிப்புகள் காப்புரிமை செய்வது அதனால்தான். நாளை இந்தக் கண்டுபிடிப்பால் நிறுவனங்கள் பயன் பெற்றால் ராயல்டி தொகை செலுத்த வேண்டும்.

ராயல்டி பிரச்னை பற்றி எழுதாத தமிழ் எழுத்தாளர்களே இல்லை என்று கூறலாம். சமீபத்தில் என் நண்பர் வெங்கட்ரங்கனுடன் (லிஃப்கோ பதிப்பக ஸ்தாபகர் திரு. கிருஷ்ண ஸ்வாமி சர்மாவின் பேரன்) பேசிக்கொண்டு இருந்தபோது அவர் 'சக்கரவர்த்தி திருமகன்' குறித்து ஒரு சம்பவத்தைப் பகிர்ந்துகொண்டர்.

கல்கியின் கிளாசிக் 'பொன்னியின் செல்வன்' வரிசையில் கல்கியில் ராஜாஜி எழுதிய 'சக்கரவர்த்தி திருமகன்' (ராமாயணம்) மற்றும் 'வியாசர் விருந்து' (மஹாபாரதம்) இரண்டும் சேரும். இந்தப் புத்தகங்களும் பல மொழி



களில் மொழிபெயர்க்கப்பட்டு பல பதிப்புகளைக் கண்டு இன்றும் சாதனை புரிந்துகொண்டு வருகிறது.

சக்கரவர்த்தி திருமகனின் தெலுங்குப் பதிப்பு உரிமை லிஃப்கோ பதிப்பகத்திடம் இருந்தது. அதற்கான 'ராயல்டி' தொகையை (ராயல்டிக்குத் தமிழ் வார்த்தை என்ன?) மாதா மாதம் ராஜாஜிக்கு அனுப்பிக்கொண்டு இருந்தார்கள். ஒரு மாதம் ராயல்டி தொகை ரூ. 1.50 என்று கணக்கு வந்தது. இந்தச் சிறு ராயல்டி தொகைக்குக் காசோலை எடுத்து தபாலில் அனுப்பும் போக்குவரத்துச் செலவுக்குப் பதில் அடுத்த மாதம் சேர்த்து அனுப்பிக்கொள்ளலாம் என்று இருந்துவிட்டார்கள்.



"பிரசாதம் கோயிலைத் தாண்டி எடுத்துக்கொண்டு வரக்கூடாது. அப்படிச் செய்தால் அதன் புனிதத்தன்மை கெட்டு விடும். இந்த முறை பெற்றுக்கொள்கிறேன். அடுத்த முறை இப்படி செய்யாதீர்கள்"

"ஏன் இந்த மாதம் ராயல்டி வரவில்லை?" என்று கேட்டு ராஜாஜி ஒரு தபால் கார்ட் அனுப்பினார். அதற்குப் பதிப்பகத்தார், "இந்த மாதம் ராயல்டி தொகை குறைவு, அடுத்த மாதம் சேர்த்து அனுப்பலாம் என்று இருந்தோம்" என்று பதில் அனுப்ப, அதற்கு ராஜாஜி, "மாதா மாதம் ராயல்டி அனுப்ப வேண்டும் என்பது ஒப்பந்தம். அதனால் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும், ஒப்பந்தப்படி அதை அனுப்ப வேண்டும். ராயல்டி இல்லாத மாதம், 'இந்த மாதம் ராயல்டி இல்லை' என்று ஒரு கார்ட் அனுப்ப வேண்டும்!" என்று எழுதியிருந்தார்.

"மன்னித்துவிடுங்கள்" என்று சர்மாஜி ராஜாஜிக்குப் பதில் அனுப்பினார்.

இன்று இந்தக் கடிதப் போக்குவரத்தைப் படித்தால் இப்படி எல்லாம் நடக்குமா என்று கற்பனைக்கு எட்டாத ஏதோ 'சயன்ஸ் ஃபிக்ஷன்' படிப்பதுபோல இருக்கிறது. ராஜாஜி குறித்து இன்னொரு சம்பவத்தைப் பகிர்ந்துகொண்டார். அது மேலும் வியக்க வைத்தது.

சில பக்தர்கள் திருப்பதியில் பெருமாளைச் சேவித்து விட்டு கிளம்பும்போது அர்ச்சகர்கள் ராஜாஜிக்கு ஸ்பெஷலாகப் பிரசாதம் கொடுத்து அனுப்பினார்கள். பக்தர்கள் ராஜாஜி இல்லத்துக்குச் சென்று பிரசாதத்தை ஒப்படைத்தபோது "பிரசாதம் கோயிலைத் தாண்டி எடுத்துக்கொண்டு வரக்கூடாது. அப்படிச் செய்தால் அதன் புனிதத்தன்மை கெட்டுவிடும். இந்த முறை பெற்றுக்கொள்கிறேன். அடுத்த முறை இப்படிச் செய்யாதீர்கள்" என்று அறிவுரை கூறி அனுப்பினார்.

இதை எழுதிக்கொண்டு இருந்தபோது எங்கள் வீட்டு அழைப்பு மணி அடித்தது (நிஜமாகவே). மாஸ்க் அணிந்து மெதுவாகக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தபோது, பக்கத்து வீட்டு மாமா மாஸ்குடன், "சார், புரட்டாசி சனிக்கிழமை, திருப்பதிக்குச் சென்று வந்தேன். இந்தாங்க, திருப்பதி லட்டு" என்று பிரசாதத்தைக் கொடுத்தார்.

லட்டுவிற்கும் ராயல்டிக்கும் என்ன சம்பந்தம்? திருப்பதி லட்டு காப்புரிமை பெற்றது. நாளை இதேபோல 'லட்டு' செய்து மாட்டிக்கொண்டால், திருப்பதி பெருமாளிடம்தான் வேண்டிக்கொள்ள வேண்டும்! ■

Published online by Lakshmi Natarajan on behalf of Bharathan Publications Pvt. Ltd. at 47-NP Jawaharlal Nehru Road, Ekkaduthangal Chennai – 600032
Editor : Lakshmi Natarajan